03119

<u>நகராட்சி நிர்வாக ஆணையரகம்,</u>
<u>சேப்பாக்கம், சென்னை—5.</u>

<u>ந.க.எண். 4289/2002/அர் 1</u> நாள் 2.4.2002.

திருப்பூர்
20 APR 2002

<u>பொருள்</u> வரியினங்கள் — சொத்துவரி — மேல் முறையீட்டு குழு — நடவடிக்கைகள் — குறித்து.

———

நகராட்சிகளிலிருந்து பெறப்படுகின்ற புகார் மனுக்கள் மற்றும் நேரடி ஆய்வின் போது, வரி மேல் முறையீட்டு குழுவினரால் சொத்து வரி விதிப்புகளின் மீது பெறப்படுகின்ற மேல்முறையீட்டு மனுக்களில் எவ்வித அடிப்படை காரணமின்றி வரி குறைப்பு செய்யப்பட்டிருப்பது தெரியவருகிறது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 ஷெட்யூல் IV பகுதி I வரி விதிப்பு சட்டங்கள் — பிரிவு 9 மற்றும் 10—ன்படி முறையே வரிச் சீராய்வின் போது செய்யப்படும் வரி விதிப்புகள் மீதும், மற்றும் வரிச்சீராய்வுகளின் இடைப்பட்ட காலத்தில் கட்டப்படும் புதிய கட்டிடங்களுக்கும் மற்றும் மாறுதல்களுக்கு உட்பட்ட கட்டிடங்களுக்கும் சிறப்பு நோட்டீஸ் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் வரிச்சீராய்வு மனுக்கள் பெற்று, ஆணையரால் பரிசீலிக்கப்படும் ஆணையரின் முடிவின் மீது, [illegible] மேல் முறையீட்டுக் குழுவிற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

பெறப்பட்ட சொத்துவரி மேல் முறையீட்டு மனுக்கள் மீது வரி விதிப்புக்கள் அரசினரால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் நெறிபடி அல்லது சட்டத் திட்டங்களுக்குட்பட்டு உள்ளதா என்பதை ஆய்வு செய்தல் வேண்டும். பின்னர் மேல் முறையீட்டு மனுவினை அக்குழு ஏற்று அல்லது மாறுதல்களுக்குட்படுத்தி செயல் அலுவலருக்கு மறு பரிசீலனைக்கு அனுப்பி வைக்கலாம். மேற்குறிப்பிட்ட நடைமுறை விதி 10 (1)(எ) தமிழ்நாடு நகராட்சிகளின் வரி மேல் முறையீட்டு குழு நடவடிக்கைகள் சட்டம் 1988—ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தும், வரி மேல் முறையீட்டு குழுவினரால் விதிகளுக்குட்படாது தகுந்த காரணமின்றி வரி குறைப்பு செய்து நகராட்சிகளின் நிதி ஆதாரத்தை சீர் குலைக்கும் விதத்தில் சில நகராட்சிகளில் நடைபெற்றுள்ளது தெரிய வருகிறது. இவ்வாறு நகராட்சி நலனுக்கு மாறாக வரி மேல் முறையீட்டு குழு முடிவு மேற்கொள்ளும் பொழுது தமிழ்நாடு நகராட்சிகளின் <u>வரி மேல்முறையீட்டு மனு நடைமுறை சட்டங்கள் 1988 விதி எண். 11—ன் படி அரசு மேல்முறையீட்டு குழுவின் நடவடிக்கைகளை, நகராட்சிகளின் நலனுக்கு குந்தகமாக இருக்கும் பட்சத்தில், ஆய்வுக்குப்பின் அக் குழுவின் நடவடிக்கைக்கு எதிர்மாறாக முடிவு எடுக்க வழி வகையுள்ளது.</u>

எனவே, மேல்முறையீட்டு குழுக்கள் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு நகராட்சி நலனைக் கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டும்.

rsec: 4289r1.doc

அவ்வாறு இல்லாத பட்சத்தில் செயல் அலுவலர்கள் அந்நிலையினை அரசின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் தங்களுடைய ஆய்வின் போது வரி மேல்முறையீட்டு குழுவின் நடவடிக்கைகள் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து அறிக்கை தர வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு செய்யப்படாவிட்டால் நகராட்சி ஆணையர் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் தங்கள் கடமையிலிருந்து தவறியதாக கருதி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை மறு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

/ஒம்./வி.கு. ஜெயக்கொடி..
நகராட்சி நிர்வாக ஆணையர்

பெறுநர்

அனைத்து நகராட்சி ஆணையர்கள் (நகர் மன்றத் தலைவர் மூலமாக)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
இருப்புக்கோப்பிற்கு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்.